**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்**

**முன்னிலை:– திருமதி. ஆ. சுபஸ்ரீ, எல்.எல்.எம்.,**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**திருப்பூர்.**

**2026–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 02 ஆம் நாள் திங்கள்கிழமை**
**திருவள்ளுவராண்டு 2057, ஸ்ரீவிசுவாவசு வருடம், தை திங்கள் 19 ம் நாள்**

**இடைக்கால மனு எண். 773/2025**
**இன்**
**அசல் வழக்கு எண். 110/2025**

விஜய் (எ) முகமது பாஷா ..மனுதாரர்/ வாதி

/எதிர்/

1.தமிழக அரசு அதற்காக
அதன் மாவட்ட ஆட்சித்தலைவர், திருப்பூர்

2. வட்டாட்சியர், திருப்பூர் வடக்கு வட்டம் ..எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

பாபுலால் (எ) பாபு ..உத்தேச தரப்பினர்

இம்மனு கடந்த 22.01.2026ம் தேதியன்று என் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி.R.இந்திரா காந்தி அவர்கள் முன்னிலையாகியும், 1,2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் திரு. N.கௌதம் அவர்கள் முன்னிலையாகியும், 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.கௌரி அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களை கேட்டறிந்தும், மனு ஆவணங்களை நன்கு பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் ஆய்வில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்,

**உத்தரவு**

1908ம் ஆண்டு உரிமையியல் நடைமுறை சட்டம், கட்டளை 1 விதி 10 (2)–ன் கீழ் மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்:**

மனுதாரர் அசல் வழக்கில் வாதி அசல் வழக்கானது விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரரின் தந்தையின் பெயர் பாபுலால் என்கின்ற பாபு என்று விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் மனுதாரரின் தந்தை அசல் வழக்கில் அவசிய தரப்பினர் எனவே மனுதாரரின் தந்தையை அசல் வழக்கில் 3ம் பிரதிவாதியாக சேர்க்க அனுமதிகோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. 1, 2 எதிர்மனுதாரன் தரப்பில் நிபந்தனையுடன் இம்மனுவை அனுமதிக்கவேண்டும் என்று மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது**.

3. **3ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்:**

அசல் வழக்கில் உத்தேச தரப்பினராக 3ம் பிரதிவாதியாக 3ம் எதிர்மனுதாரரை சேர்க்கவேண்டியது அவசியமானது. 3ம் எதிர்மனுதாரரை அசல் வழக்கில் 3ம் பிரதிவாதியாக சேர்ப்பதற்கு எத்தகைய ஆட்சேபணையும் இல்லை. எனது இம்மனுவை அனுமதிக்கவேண்டி எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4.** மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை. இரு தரப்பு வாதுரையும் கேட்கப்பட்டது.

**5.** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதிகள் யாதெனில், மனுதாரர்கள் கோரிய படி மனுவை அனுமதிக்க வேண்டுமா? என்பதேயாகும்.

6. **<u>தீர்வு</u> :**

**6.1** அசல் வழக்கானது மனுதாரர்/வாதியால் வாதியின் பெயர் மற்றும் பிறந்த தேதி குறித்தும், வாதியின் தந்தை பெயர் குறித்தும் விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. உத்தேச தரப்பினரான மனுதாரர்/வாதியின் தந்தை அவரை அசல் வழக்கில் தரப்பினராக சேர்ப்பதற்கு ஆட்சேபணை இல்லை என்று எதிருரை தாக்கல் செய்துள்ளார்.

**6.2** அசல் வழக்கானது மனுதாரரின் தந்தை பெயரான உத்தேச தரப்பினரின் பெயர் குறித்து விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், அசல் வழக்கின் தீர்வுக்கு உத்தேச தரப்பினர் அவசியமானவர் என்று முடிவு செய்து, மனுவை அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

**முடிவில்,** மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 02 ஆம் நாள் அவையறிய பகரப்பட்டு, இன்றே பதிவேற்றம் செய்யப்பட்டது.

A SUBASHRI
Digitally signed by A SUBASHRI
Date: 2026.02.02 11:54:45 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருப்பூர்.

**<u>இரு தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :</u>** இல்லை.

A SUBASHRI
Digitally signed by A SUBASHRI
Date: 2026.02.02 11:54:58 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருப்பூர்

A 773/2025 in OS 110/2025 ADM, TPR.